Private E-Sevai Center
CSC Center
STAR RAINBOW SERVICES
VADAPALANI
8144337349

# ஹலோ மிரர் மெட்ராஸ்

hellomadrasdaily@gmail.com RNI No.TNBIL/2021/81709 தினசரி காலை நாளிதழ்

உள்ளது உள்ளபடி

KARUNAII TRUST
அன்னை சிறப்பு பள்ளி
Contact : 98413 59935

மலர் 2 | சென்னை | தினசரி | 4 பக்கம் | வியாழக்கிழமை, அக்டோபர் 27, 2022 | 4 பக்கங்கள் | ரூ.2/- | இதழ் 105

## கோவை கார் குண்டுவெடிப்பு- கைதானவர்களை 3 நாட்கள் போலீஸ் கஸ்டடியில் வைத்து விசாரிக்க அனுமதி




சென்னை, அக்டோபர் 27 2022: கோவை கோட்டைமேட்டில் உள்ள சங்கமேஸ்வரர் கோவில் முன்பு தீபாவளிக்கு முந்தைய நாளான 23-ந்தேதி காரில் சிலிண்டர் வெடித்து சிதறியது. காரில் இருந்த ஜமேஷா முபின் (வயது 29) உடல் கருகி பலியானார். கார் வெடித்த இடத்தில் ஆணிகளும், கோலிக்குண்டுகளும், பால்ரஸ் குண்டுகளும் கைப்பற்றப்பட்டன. ஜமேஷா முபின் வீட்டில் நடத்தப்பட்ட சோதனையில் அங்கு 75 கிலோ வெடிமருந்துகள் பதுக்கி வைக்கப்பட்டிருந்தது கண்டுபிடிக்கப்பட்டது. இதில் பொட்டாசியம் நைட்ரேட், சார்கோல், அலுமினியம் பவுடர், சல்பர் உள்ளிட்ட வெடிபொருட்கள் அடங்கும். இதையடுத்து போலீசார் 9 தனிப்படை அமைத்து விசாரணை நடத்தியதில் 5 பேர் கைது செய்யப்பட்டனர். அவர்கள் மீது உபா சட்டத்தின்கீழ் வழக்கு பதிவு செய்யப்பட்டுள்ளனர்.

அவர்களை நவம்பர் 8ம் தேதி வரை நீதிமன்றக் காவலில் வைக்கும்படி நீதிமன்றம் உத்தரவிட்டது. தொடர்ந்து விசாரணை நடந்து வரும் நிலையில், வழக்கில் கூடுதல் ஆதாரங்கள் மற்றும் முக்கிய தகவல்களை பெற வேண்டியிருப்பதால் கைது செய்யப்பட்ட 5 பேரையும் காவலில் எடுத்து விசாரிக்க காவல்துறை முடிவு செய்தது. அதன்படி கோவை மாவட்ட முதன்மை நீதிமன்றத்தில் காவல்துறை தரப்பில் மனு தாக்கல் செய்யப்பட்டது. கைது செய்யப்பட்ட 5 பேரையும் 5 நாட்கள் போலீஸ் கஸ்டடியில் வைத்து விசாரிக்க அனுமதிக்கும்படி காவல்துறை மனுவில் தெரிவிக்கப்பட்டிருந்தது. இந்த மனுவை விசாரித்த நீதிபதி, 3 நாட்கள் காவலில் வைத்து விசாரிக்க அனுமதி அளித்தார். இதையடுத்து, கைது செய்யப்பட்ட 5 பேரையும் நீதிமன்றத்தில் இருந்து அழைத்து வந்து, ரகசிய இடத்தில் வைத்து விசாரணை நடத்த உள்ளனர். இந்த வழக்கை தேசிய புலனாய்வு அமைப்புக்கு மாற்றும்படி முதலமைச்சர் மு.க.ஸ்டாலின் பரிந்துரை செய்துள்ளது குறிப்பிடத்தக்கது.

## உக்ரைனில் பாதுகாப்பற்ற சூழ்நிலை நிலவுவதால் இந்திய மக்கள் வெளியேறுங்கள்: இந்தியர்களுக்கு தூதரகம் அறிவுறுத்தல்



சென்னை, அக்டோபர் 27 2022: உக்ரைனில் பாதுகாப்பற்ற சூழ்நிலை நிலவுவதால் இங்குள்ள இந்திய பிரஜைகள் உக்ரைனை விட்டு உடனே வெளியேறுமாறு இந்திய தூதரகம் வேண்டுகோள் விடுத்துள்ளது. உக்ரைன் - ரஷ்யா இடையிலான தாக்குதல் தீவிரமடைந்து வரும் நிலையில், உக்ரைனில் உள்ள இந்திய தூதரகம் வெளியிட்ட அறிக்கையில், 'அனைத்து இந்திய பிரஜைகளும் உக்ரைனில் இருந்து உடனடியாக வெளியேற வேண்டும். உக்ரைனில் பாதுகாப்பற்ற சூழல் அதிகரித்து வருவதால், இந்த ஆலோசனைகள் வழங்கப்படுகின்றன' என்று தெரிவித்துள்ளது.

முன்னதாக கடந்த 19ம் தேதி இதே போன்று உக்ரைனில் உள்ள அனைத்து இந்திய பிரஜைகளும், உடனடியாக உக்ரைனை விட்டு வெளியேற வேண்டும் என்று இந்திய தூதரகம் அறிவுறுத்தியது. அதன் தொடர்ச்சியாக, சில இந்திய பிரஜைகள் உக்ரைனை விட்டு வெளியேறியதாக தூதரகம் தெரிவித்தது. இந்த நிலையில் இரண்டாவது முறையாக தற்போது மீண்டும் இந்திய பிரஜைகளுக்கு தூதரகம் சார்பில் அறிவுறுத்தல்கள் வழங்கப்பட்டுள்ளன.

## இந்திய ரூ சீன வேறுபாடுகளை விடவும் பொதுவான நலன்கள் முதன்மையானது – சீன தூதர்




சென்னை, அக்டோபர் 27 2022: இந்தியாவும் சீனாவும் அரசியல் அமைப்புகளுக்கு மதிப்பளித்து, இருதரப்பு உள் விவகாரங்களில் தலையிடக் கூடாது என்ற கொள்கையை நிலைநாட்ட வேண்டும் என்று இந்தியாவுக்கான சீன தூதர் சன் வெய்டாங் தெரிவித்துள்ளார்.

இந்தியாவுக்கான சீன தூதர் சன் வெய்டாங், சீன தூதரக இணையதளத்தில் வெளியிட்டுள்ள அவரது பிரியாவிடையில் கூறி இருப்பதாவது:ரூ

'சீனாவும் இந்தியாவும் முக்கியமான அண்டை நாடுகள். சீனாவிற்கும் இந்தியாவிற்கும் சில வேறுபாடுகள் இருப்பது இயற்கையானது. வேறுபாடுகளை எவ்வாறு கையாள்வது என்பது முக்கியமானது. வேறுபாடுகளை விட, இரு நாடுகளின் பொதுவான நலன்கள் பெரியவை என்பதை நாம் அறிந்திருக்க வேண்டும். இரு நாடுகளும் பரஸ்பர அரசியல் அமைப்புகள் மற்றும் வளர்ச்சிப் பாதைகளை மதிக்க வேண்டும். மேலும் ஒருவருக்கொருவர் உள் விவகாரங்களில் தலையிடாத கொள்கையை நிலைநாட்ட வேண்டும்.

மேலும் தகவல்தொடர்பு மற்றும் ஒத்துழைப்பை மேம்படுத்துவதன் அவசியத்தை வலியுறுத்திய சன் வெய்டாங், இந்திய குடிமக்களுக்கான விசா விண்ணப்ப செயல்முறையை சீனா மேம்படுத்தியுள்ளது. நீண்ட கால படிப்பைத் தொடரும் மாணவர்கள் மற்றும் பிற நோக்கங்களுக்காக வருகை தருபவர்களுக்கான விசா விண்ணப்பங்களை மீண்டும் செயலாக்கத் தொடங்கியது. 'இதுவரை, இந்திய மாணவர்களுக்கு 1,800க்கும் மேற்பட்ட விசாக்கள் வழங்கப்பட்டுள்ளன. மேலும் நமது மக்களிடையே மேலும் மேலும் வருகை பரிமாற்றங்கள் இருக்கும் என்று நாங்கள் நம்புகிறோம்.

### ரூ.10 லட்சம் கோடி வணிகம்

ஜூலை 2019 இல் இந்தியாவுக்கான சீனத் தூதராகப் பொறுப்பேற்றதை நினைவுகூர்ந்த சன் வெய்டாங், இந்த காலகட்டத்தில், சீனா-இந்தியா உறவுகள் 'ஏற்றதாழ்வுகளை' சந்தித்த நிலையிலும், இரு நாடுகளுக்கும் இடையிலான இருதரப்பு வர்த்தக அளவு 120 பில்லியன் டாலருக்கும் ( சுமார் ரூ.10 லட்சம் கோடி) அதிகமாக இருப்பதைக் கண்டதாகக் கூறினார். 'நமது இரு நாட்டுத் தலைவர்களின் வியூக வழிகாட்டுதலின் கீழும், இரு தரப்பு கூட்டு முயற்சியுடனும், இருதரப்பு உறவுகள், மேகங்கள் மறைந்து சரியான பாதையில் திரும்பும் என்று நான் நம்புகிறேன்.

'சீனாவும் இந்தியாவும் ஒன்றாக வளர்ச்சியடைவதற்கு உலகில் போதுமான இடங்கள் உள்ளன. சீனா-இந்தியா நட்புறவுக்கான காரணம் சரியானது என்றும் பரந்த வாய்ப்புகள் உள்ளன என்றும் நான் உறுதியாக நம்புகிறேன். நீல வானத்தைப் பார்ப்போமாக, நம் கால்களை பூமியில் வைப்போமாக, இதயத்தில் நம்பிக்கை வைத்து கைகளில் அரவணைப்போம். இரு தரப்பு கூட்டு முயற்சிகள் மூலம், சீனா-இந்தியா உறவுகளை நாம் சரியான பாதையில் கொண்டு வர முடியும் என்று கூறி உள்ளார்.

## கூகுள் பிளே-ஸ்டோர் தவறாக பயன்படுத்தியதாக, கூகுள் நிறுவனத்துக்கு ரூ.936 கோடி அபதாரதம் – இந்திய வணிகப்போட்டி ஆணையம்

சென்னை, அக்டோபர் 27 2022: கூகுள் பிளே-ஸ்டோர் செயலிகளுக்குரிய கொள்கை அதிகாரத்தை தவறாக பயன்படுத்தியதாக, ரூ.936 கோடியே 44 லட்சம் அபதாரதத்தை விதித்து, கூகுள் நிறுவனத்துக்கு இந்திய வணிகப்போட்டி ஆணையம் உத்தரவிட்டுள்ளது.

மொபைல் செயலிகள் (ஆப்ஸ்) அனைத்து பயனர்களையும் சென்றடைய கூகுள் பிளே ஸ்டோர் அத்தியாவசிய ஊடகமாக மாறிவிட்டது. ஆன்ட்ராய்டு மொபைல் போன்களுக்குரிய செயலிகளை உருவாக்கும் உற்பத்தியாளர்களின் முக்கியமான விநியோகஸ்தராக கூகுள் பிளே ஸ்டோர் இருக்கிறது. இது சந்தைக்கு வருகிற செயலிகளை செல்போன் பயனர்கள் பயன்படுத்திக்கொள்ள உதவுகிறது.

### ரூ.936 கோடி அபராதம்

இந்நிலையில் கூகுள் நிறுவனம் அதன் பிளே-ஸ்டோர் (ஆப்ஸ்) செயலிகளுக்குரிய கொள்கை அதிகாரங்களை, தவறாக பயன்படுத்தியதற்காக இந்திய வணிகப்போட்டி ஆணையம், கூகுள் நிறுவனத்துக்கு ரூபாய்.936 கோடியே 44 லட்சம் அபராதம் விதித்து உத்தரவு பிறப்பித்துள்ளது. மேலும் குறிப்பிட்ட காலக்கெடுவுக்குள், தன் கொள்கை நடத்தைகளை மாற்றியமைக்கு மாறும் கூகுள் நிறுவனத்திற்கு இந்திய வணிகப் போட்டி ஆணையம் அறிவுறுத்தி இருக்கிறது என்பது குறிப்பிடத்தக்கது.




"printed by R.SATHYANARAYANAN and published by R.SATHYANARAYANAN on behalf of R.SATHYANARAYANAN and printed at Chennai Offset Printers No.19/1, 21/2, Kitabath Khan Bhandur street, Ellis Road, Chennai-600 002, and published at No.11, South Perumal Koil Street, Vadapalani, Chennai - 600 026 Editor R.SATHYANARAYANAN"

ஹலோ மிரர் மெட்ராஸ்
hellomadrasdaily@gmail.com RNI No.TNBIL/2021/81709 தினசரி காலை நாளிதழ்
உள்ளது உள்ளபடி



# தொலைத்தொடர்புத் துறையின் தமிழ்நாடு அலுவலகங்களான சென்னை, கோயம்புத்தூர் அலுவலக வளாகங்கள் மற்றும் சுற்றுப்புற பகுதிகளில் தூய்மை பிரச்சாரம் 2.0 நடவடிக்கைகளை எடுத்துள்ளன



சென்னை, அக்டோபர் 27 2022: தூய்மை இந்தியா 2.0 சிறப்பு பிரச்சாரம்" 02.10.2022 முதல் 31.10.2022 வரை அனைத்து மத்திய அமைச்சகங்கள்/துறைகளால் பான் இந்தியா அடிப்படையில் ஏற்பாடு செய்யப்பட்டுள்ளது. நிர்வாகச் சீர்திருத்தங்கள் மற்றும் பொதுப் பிரச்சினைகள் துறையின் அறிவுறுத்தலின்படி, தமிழ்நாடு தொலைத் தொடர்புத்துறை அக்டோபர் 2 முதல் 31 வரை, நிலுவையில் உள்ள பிரச்சினைகளுக்கு தீர்வு காண்பதற்கான இரண்டாவது பிரச்சாரத்தை நடத்துகிறது.

இந்த பிரச்சாரத்தின் ஒருபகுதியாக, சென்னை மற்றும் கோயம்புத்தூரில் உள்ள தொலைத்தொடர்பு அலுவலக கட்டிடங்களில் தூய்மை நடவடிக்கைகள் மேற்கொள்ளப்படுகின்றன. இலக்கை அடைய நடவடிக்கைகளை ஒருங்கிணைக்க கண்காணிக்க அதிகாரிகள் நியமிக்கப்பட்டு உள்ளனர். கண்காணிப்பு அதிகாரிகள் தெரிவித்த தகவல்களின் அடிப்படையில், புதுதில்லியில் உள்ள தொலைத்தொடர்பு தலைமை அலுவலகத்தில், நிர்வாகச் சீர்திருத்தங்கள் மற்றும் பொதுமக்கள் குறை தீர்ப்பு இணையப்பக்கம் புதுப்பிக்கப்படுகிறது. இந்த பிரச்சாரத்தின்போது, அலுவலக வளாகம் மற்றும் அதன் சுற்றுப்புறங்களின் தூய்மை, தேர்ந்தெடுக்கப்பட்ட வெளிப்புற பகுதிகளை தூய்மைப்படுத்துதல், நிலுவையில் உள்ள பொதுமக்களின் அனைத்து பிரச்சினைகளுக்கும் தீர்வு காணுதல், விதிகள் மற்றும் நடைமுறைகளை எளிமைப்படுத்துதல், பதிவு மேலாண்மை, விண்வெளி மேலாண்மை, திட்டமிடுதல், கழிவுகளை அகற்றுதல் உள்ளிட்டவற்றில் முக்கிய கவனம் செலுத்தப்படுகிறது.

பிரச்சாரத்தின்போது, தொலைத்தொடர்புத் துறையின் தமிழ்நாடு அலுவலகங்களான சென்னை, கோயம்புத்தூர், திருப்பூர் மாவட்டங்களில் உள்ள கிராமப் பஞ்சாயத்துக்கள் தங்கள் அலுவலகம் மற்றம் சுற்றுப்புற பகுதிகளில் தூய்மைப் பிரச்சாரத்தை மேற்கொள்கின்றன. நிலுவையில் உள்ள பொதுமக்களின் குறைகள் அனைத்துக்கும் தீர்வு காணப்பட்டு நிவர்த்தி செய்யப்பட்டுள்ளன. சுமார் 800 பழைய கோப்புகள், பதிவுகள் நீக்கப்பட்டு, "சிறப்பு பிரச்சாரம் 2.0"-இன் போது வகுக்கப்பட்ட நெறிமுறைகளின்படி, அலுவலகத்தில் இருந்த காலாவதியான பொருட்கள் அப்புறப்படுத்தப்பட்டன.

# குடியரசுதுணைத் தலைவர் பொற்கோவிலுக்கு சென்றிருந்தார்; நமது மகத்தான குருக்களின் ஆன்மிகபாரம்பரியத்திற்கு ஒளிரும் உதாரணம் இது என்று அவர் குறிப்பிட்டார்



சென்னை, அக்டோபர் 27 2022: அமிர்தசரஸில் உள்ள ஸ்ரீ தர்பார் சாஹிபுக்கு (பொற்கோவிலுக்கு) குடியரசு துணைத் தலைவர் திரு ஜெக்தீப் தன்கர் சென்றிருந்தார். நமது மகத்தான குருக்களின் ஆன்மிக பாரம்பரியத்திற்கு ஒளிரும் உதாரணம் இது என்று அவர் குறிப்பிட்டார்.

பஞ்சாப் மாநிலத்திற்கு முதன்முறையாக இன்று ஒருநாள் பயணம் மேற்கொண்ட குடியரசு துணைத் தலைவர், அமிர்தசரஸுக்கு சென்றிருந்தார். பொற்கோவிலில் உள்ள அமைதி, ஈடுபாடு, சேவை உணர்வு ஆகியவை மறக்கமுடியாத அனுபவம் என்று அவர் குறிப்பிட்டார்.

பார்வையாளர் புத்தகத்தில் குறிப்பு எழுதிய அவர், குருக்களுக்கு புகழாரம் சூட்டினார். பன்னெடுங்காலமாக அன்பு, மனிதாபிமானம், கருணை, சகோதரத்துவம் ஆகியவற்றை ஸ்ரீஹர்மந்திர் சாஹிப் செய்தியாக வெளிப்படுத்துகிறது என்றும் அவர் குறிப்பிட்டார்.

இந்த பயணத்தின் போது, பொற்கோவிலில் குடியரசு துணைத் தலைவர் உணவு அருந்தினார். தமது குடும்ப உறுப்பினர்களுடன் சேவையிலும் பங்கேற்றார்.

இதன்பின்னர், ஜாலியன் வாலாபாக் சென்றிருந்த அவர், தியாகிகளுக்கு மலரஞ்சலி செலுத்தினார். இந்த இடம் தேசிய முக்கியத்துவம் வாய்ந்த நினைவிடம் என்று அவர் கூறினார்.

ஸ்ரீதுர்கையானா கோவில் மற்றும் ஸ்ரீராம் தீர்த்தம் ஆகியவற்றுக்கு குடும்பத்தினருடன் சென்றிருந்த குடியரசு துணைத் தலைவர் தரிசனமும், பூஜையும் செய்தார்.

# ஆசிய அடிப்படைக் கட்டமைப்பு முதலீட்டு வங்கியின் 7-ஆவது வருடாந்திர கவர்னர்கள் வாரியக்கூட்டத்தில் நிர்மலா சீதாராமன் பங்கேற்றார்

சென்னை, அக்டோபர் 27 2022: அடிப்படைக் கட்டமைப்பு முதலீட்டு வங்கியின் 7-ஆவது வருடாந்திர கவர்னர்கள் வாரியக் கூட்டத்தில் மத்திய நிதியமைச்சர் திருமதி நிர்மலா சீதாராமன் இன்று புதுதில்லியில் இருந்து காணொலிக் காட்சி மூலம் பங்கேற்றார்.

"நெருக்கடி மிகுந்த உலகில் அடிப்படைக் கட்டமைப்புக்கு நிதி உதவுதல்" என்ற மையப்பொருளில் நடைபெற்ற கவர்னர்களின் வட்டமேஜை விவாதத்தில் நிதியமைச்சர் தமது கருத்துக்களை பகிர்ந்து கொண்டார். உயர்தரமான வளர்ச்சிக்கு நிதி வழங்குவதற்காகவும், உறுப்பு நாடுகளுக்கு உதவி செய்வதில் தொடர்ச்சியான உறுதி மற்றும் அர்ப்பணிப்புக்காகவும் ஆசிய அடிப்படைக் கட்டமைப்பு முதலீட்டு வங்கியை நிதியமைச்சர் பாராட்டினார்.

தற்சார்பு பொருளாதார பாதையில் இந்தியா சென்றுகொண்டிருப்பதை திட்டவட்டமாக தெரிவித்த அவர், இதனால், பெருந்தொற்றுக் காலத்தின் எதிர்மறை விளைவுகளை வெற்றிகரமாக குறைக்க முடிந்தது என்றார். டிஜிட்டல்மய இயக்கம், சமூக பாதுகாப்புக்குத் தொழில்நுட்பத்தைப் பயன்படுத்துதல், அனைவரையும் உள்ளடக்கிய நிதி முறையை ஊக்குவித்தல் ஆகியவை இந்தியாவை குறிப்பிடத்தக்க அளவுக்கு முன்னேறச் செய்துள்ளன என்பதை திருமதி சீதாராமன் சுட்டிக்காட்டினார். சுற்றுச்சூழலுக்கான வாழ்க்கை முறை உள்ளிட்ட பிரதமர் திரு நரேந்திர மோடியின் பல்வேறு திட்டங்களால் பருவநிலை மாற்றத்தை எதிர்கொள்வதற்கான முயற்சிகளில் இந்தியா முதன்மையாக உள்ளது என்பதை அவர் எடுத்துரைத்தார்.

தூய்மையான எரிசக்தி, எரிசக்தியை திறமையாக பயன்படுத்துதல், பேரிடரை தாங்கவல்ல அடிப்படைக் கட்டமைப்பு, கல்வி மற்றும் சுகாதாரத்தின் மீது சிறப்பு கவனம் செலுத்துவதற்கான சமூக அடிப்படைக் கட்டமைப்பு, டிஜிட்டல் அடிப்படைக் கட்டமைப்பு உள்ளிட்ட முன்னுரிமைத் துறைகளில் முதலீடுகளை ஆசிய அடிப்படைக் கட்டமைப்பு முதலீட்டு வங்கி அதிகரிப்பது அவசியம் என்று நிதியமைச்சர் தெரிவித்தார்.

ஆண்டும் இந்த வங்கி முக்கியமான விஷயங்களில் முடிவெடுக்கவும், எதிர்கால திட்டத்திற்காகவும் கவர்னர்களின் வாரியக் கூட்டத்தை நடத்துகிறது. இந்த வங்கியின் நிறுவக உறுப்பினராக இருக்கும் இந்தியா இரண்டாவது பெரிய பங்குதாரராகவும் உள்ளது.

# ஸ்ரீபெரும்புதூரில் சுத்திகரிப்புப் பணியில் விஷவாயு தாக்கி உயிரிழந்த 3 பேரின் குடும்பங்களுக்கு தலா ரூ. 21 லட்சம் இழப்பீடு - - ஷெட்யூல்டு வகுப்பினருக்கான தேசிய ஆணையத்தின் துணைத் தலைவர் திரு அருண் ஹால்டர்



சென்னை, அக்டோபர் 27 2022: காஞ்சிபுரம் மாவட்டம் ஸ்ரீபெரும்புதூரில் உள்ள ஹோட்டல் ஒன்றில் கழிவு நீர் தொட்டி சுத்திகரிப்புப் பணியின் போது, விஷவாயு தாக்கி உயிரிழந்த 3 பேரின் குடும்பத்தினருக்கு தலா ரூ. 21 லட்சம் வழங்கப்படும் என்று ஷெட்யூல்டு வகுப்பினருக்கான தேசிய ஆணையத்தின் துணைத் தலைவர் திரு அருண் ஹால்டர் தெரிவித்துள்ளார். சம்பவ இடத்தை இன்று நேரில் ஆய்வு செய்த அவர், பின்னர் சென்னையில் செய்தியாளர்களிடம் பேசுகையில், இந்த இழப்பீட்டுத் தொகையில் 15 லட்சம் ரூபாயை சம்பந்தப்பட்ட ஹோட்டல் நிர்வாகமும், 6 லட்சம் ரூபாயை தமிழக அரசும் வழங்கும் என்றார்.

இதுதவிர, இந்த குடும்பங்களுக்கு கருணைத் தொகையாக மாதந்தோறும் 5 ஆயிரம் ரூபாயும், வீட்டுமனைப் பட்டாவும் அளிக்கப்படுவதோடு, குடும்பத்தில் ஒருவருக்கு வேலைவாய்ப்பு வழங்கவும் மாவட்ட நிர்வாகம் ஒப்புக் கொண்டிருப்பதாக அவர் கூறினார். இந்த சம்பவம் தொடர்பாக, ஹோட்டலின் உரிமையாளரை அடுத்த 72 மணி நேரத்திற்குள் கைது செய்ய வேண்டும் என்று மாவட்ட காவல்துறையினருக்கு தாம் உத்தரவிட்டிருப்பதாகவும் திரு ஹால்டர் தெரிவித்தார். ஏற்கனவே, ஹோட்டலின் பொதுமேலாளர், ஒப்பந்ததாரர் ஆகியோர் கைது செய்யப்பட்டுள்ளனர். கழிவுநீர் தொட்டிகளை சுத்தம் செய்வது எந்திரமயமாக்கப்பட்டு, மனிதர்கள் பயன்படுத்தப்படுவது சட்ட ரீதியாக தடை செய்யப்பட்டுள்ளது. இது குறித்த விழிப்புணர்வை ஏற்படுத்துவது அவசியம் என்று அவர் வலியுறுத்தினார். இத்தகைய விழிப்புணர்வு பணியில் சமூக ஊடகங்களும், தமிழக அரசும் தீவிரமாக ஈடுபட வேண்டும் என்று அவர் கேட்டுக் கொண்டார்.

இந்த சம்பவம் குறித்து ஊடகங்களில் வெளியான செய்தியை அடுத்து ஆணையம் தாமாகவே முன்வந்து நடவடிக்கை எடுத்துள்ளது என்று கூறிய திரு ஹால்டர் இத்தகைய பணிக்காக ஊடகங்களுக்கு நன்றி தெரிவிப்பதாக கூறினார்.

# இந்திய கடலோரக் காவல்படை பங்களாதேஷின் 20 மீனவர்களை மீட்டு அந்நாட்டு கடலோரக் காவல்படையிடம் ஒப்படைத்தது



சென்னை, அக்டோபர் 27 2022: இந்தியா-பங்களாதேஷ் சர்வதேச கடல் எல்லைக்கோடு அருகே சாகர் தீவுக்கு அப்பால் உள்ள கடல் பகுதியில் இருந்து பங்களாதேஷைச் சேர்ந்த 20 மீனவர்களை இந்திய கடலோரக் காவல்படை 2022 அக்டோபர் 25 அன்று மீட்டது. சித்ரங் புயலில் இந்த மீனவர்களின் படகுகள் கவிழ்ந்ததை அடுத்து, இதுகுறித்து தேடுதல் மற்றும் மீட்புக் குழுவுக்கு இந்திய கடலோரக் காவல்படை தகவல் தெரிவித்தது. பின்னர் விரைந்து நடவடிக்கையை மேற்கொண்ட இந்திய கடலோரக் காவல்படையினர் இவர்களை உடனடியாக மீட்டு, பங்களாதேஷ் கடலோரக் காவல்படையிடம் ஒப்படைத்தனர்.

புயல் கரை கடந்த பின் இந்திய கடலோரக் காவல்படை ஒடிசா மற்றும் மேற்கு வங்க கடலோரப் பகுதியை தூய்மைப்படுத்தவும், புயலால் பாதிக்கப்பட்ட கப்பல் மாலுமிகளுக்கு உதவி செய்யவும், டோர்னியர் விமானத்தை பயன்படுத்தியது. அப்போது, இந்தியா-பங்களாதேஷ் சர்வதேச கடல் எல்லை பகுதியில் இருந்து 90 நாட்டிகல் மைலுக்கு அப்பால் படகுகள் கவிழ்ந்து சுமார் 30 பேர் தத்தளிப்பது தெரிய வந்தது. உடைந்த படகுகளின் பாகங்களை பற்றிக்கொண்டு அவர்கள் உயிருக்கு போராடிய போது, இந்திய கடலோரக் காவல்படையினர் உயிர்காக்கும் தெப்பம் போன்ற சாதனத்தை விமானத்தில் இருந்து வீசினர்.

இதைத் தொடர்ந்து, கடலில் தத்தளிக்கும் 20 பேரை மீட்பதற்கு மலேசியாவின் க்லாங் துறைமுகத்தில் இருந்து கொல்கத்தாவுக்கு சென்றுகொண்டிருந்த நந்த்தா பூம் என்ற வணிகக் கப்பலுக்கு இந்திய கடலோரக் காவல்படையினர் உத்தரவிட்டனர்.

கடலோரக் காவல்படை கப்பல்களான விஜயா, வரத், சி-426 ஆகிய கப்பல்களும் தேடுதல் மற்றும் மீட்புக்கு உதவி செய்தன. இந்நிலையில், விஜயா கப்பல் மூலம் பங்களாதேஷ் மீனவர்கள் 20 பேர் மீட்கப்பட்டனர். கப்பலில் இருந்த மருத்துவ அதிகாரி மூலம் இவர்கள் பரிசோதிக்கப்பட்டு பங்களாதேஷ் கடலோர காவல்படையிடம் ஒப்படைக்கப்பட்டனர்.

ஹலோ மிரர் மெட்ராஸ்
hellomadrasdaily@gmail.com தினசரி காலை நாளிதழ்
உள்ளது உள்ளபடி



## குரங்கு பெடல் திரைப்படம் இந்த ஆண்டுக்கான சர்வதேச திரைப்பட விழாவில் இந்தியன் பனோரமாவினால் அதிகாரப்பூர்வமாக தேர்ந்தெடுக்கப்பட்டு திரையிடப்பட இருக்கிறது

சென்னை, அக்டோபர் 27 2022: எங்களது இரண்டாவது திரைப்படமான குரங்கு பெடல் திரைப்படம் இந்த ஆண்டு கோவாவில் நடக்கவிருக்கும் நவம்பர் 20 முதல் 28 வரை ஆண்டுக்கான சர்வதேச திரைப்பட விழாவில் இந்தியன் பனோரமாவினால் அதிகாரப்பூர்வமாக தேர்ந்தெடுக்கப்பட்டு திரையிடப்பட இருக்கிறது என்பதை அறிவிப்பதில் பெரும் மகிழ்ச்சி அடைகிறோம்.




மதுபான கடை, வட்டம் திரைப்படங்களை இயக்கிய கமலக்கண்ணன் இந்த திரைப்படத்தை இயக்கி இருக்கிறார்.

மாண்டேஜ் பிக்சர்ஸ் சவிதா சண்முகம் ,சுமீ பாஸ்கரன், இணைத்தயாரிப்பு எஸ் ஆர் ஜெ புரடக்சன்ஸ் சஞ்சய் ஜெயக்குமார் மற்றும் கத கேளு எண்டர்டெயினர்ஸ் உடன் இனைந்து தயாரித்துள்ளோம்.

திரு. ராசி அழகப்பனின் அவர்களின் சிறுகதையை அடிப்படையாகக் கொண்டு பிரபாகர் சண்முகம் மற்றும் கமலக்கண்ணன் திரைக்கதை அமைத்திருக்கிறார்கள்.

1980 களின் கோடை காலத்தில் சேலம் (தற்போது நாமக்கல் மாவட்டம்) மற்றும் ஈரோடு மாவட்டங்களின் காவேரிக்கரையோர பகுதிகளை களமாகக்கொண்டு எடுக்கப்பட்ட திரைப்படமான இதில் குழந்தைகளுடன் திரு.காளி வெங்கட் அவர்கள் முக்கிய கதாப்பாத்திரத்தில் நடித்திருக்கிறார்.

உயிரோட்டமான பாடல்கள் மற்றும் சிறப்பான பிண்ணனி இசையின் மூலம் மக்களை கவர்ந்த ஜிப்ரான் வைபோதா இசை அமைத்திருக்கிறார். ஜிப்ரானின் பிண்ணனி இசை, மற்றும் பாடல்கள் இப்படத்திற்கு முதுகெலும்பாக அமைந்திருக்கிறது.

காலா, பரியேறும் பெருமாள், சர்ப்பாட்டா பரம்பரை, குதிரை வால், ஜல்சா ( ஹிந்தி ) திரைப்படங்களுக்கு ஒலிக்கலவை செய்த அந்தொனி பி ஜெ ரூபனின் ஒலிக்கலவை இத்திரைப்படத்தை உலகத்தரத்துக்கு கொண்டு சேர்த்திருக்கிறது.

தீரன் அதிகாரம் ஒன்று, டெடி, க/பெ ரணசிங்கம், வட்டம் திரைப்படங்களுக்கு படத்தொகுப்பு செய்த சிவா நந்தீஸ்வரனின் மிக நேர்த்தியான படத்தொகுப்பு கூடுதல் பலமாக அமைந்திருக்கிறது.

சுமீ பாஸ்கரன் தனது சிறப்பான ஒளிப்பதிவின் மூலம் இயக்குனரின் கற்பனையை அப்படியே திரையில் காட்சி படுத்தியிருக்கிறார்.

இயக்குனர் பிரம்மா, என்.டி. ராஜ்குமார் ஆகியோர் பாடல்கள் எழுதி இருக்கிறார்கள்.

வெந்து தணிந்தது காடு, ஜெய் பீம், காத்துவாக்குல ரெண்டு காதல், சாணிக்காயிதம், சூப்பர் டீலக்ஸ் படங்களுக்கு வண்ணக்கலவை செய்த பாலாஜி கோபால் இத்திரைப்படத்துக்கு சிறப்பான பங்களிப்பை அளித்திருக்கிறார்.

1980 களின் கோடைகாலத்தில் கத்தேரி என்கிற கிராமத்தில் சைக்கிள் ஓட்டத்தெரியாத ஒரு தகப்பனுக்கும், சைக்கிள் ஓட்டிப்பழகுவதில் ஆர்வமாக இருக்கும் மகனுக்கும் இடையே நடக்கும் சுவாரஸ்யமான கதையை இத்திரைப்படம் விவரிக்கிறது.

## உற்சாகத்தில் சாக்ஷி அகர்வால்
## கதையின் நாயகியாக ஜொலிக்கும் சாக்ஷி அகர்வால்

சென்னை, அக்டோபர் 27 2022: சிறிய கண்கள்... சீரான நாசி... ஒற்றை நாடி... கவர்ச்சியான உதடுகள்... என இன்றைய இளைஞர்கள் எதிர்பார்க்கும் ரசனையான அழகியலுடன் தோன்றி அனைவரது செல்போன், லேப்டாப், கம்ப்யூட்டரின் டிபியாக ஆக்கிரமித்திருக்கும் அழகி சாக்ஷி அகர்வால். இதனாலேயே இவர் படு உற்சாகமாக இருக்கிறார்.



தமிழ் திரையுலகில் விமர்சன ரீதியாகவும், வசூல் ரீதியாகவும் மாபெரும் வெற்றியைப் பெற்ற சூப்பர் ஸ்டாரின் 'காலா', அஜித்குமாரின் 'விஸ்வாசம்', சுந்தர் சியின் 'அரண்மனை 3' ஆகிய படங்களில் நடித்ததன் மூலம் தன்னுடைய தனித்துவமான திறமையை வெளிப்படுத்தியவர் நடிகை சாக்ஷி அகர்வால். முன்னணி நட்சத்திர நடிகைகளின் பட்டியலில் இணைவதற்காக கடுமையாக உழைத்து வரும் இவர் தற்போது கதையின் நாயகிக்கு முக்கியத்துவம் அளிக்கும் கதைகளையும் கதாபாத்திரங்களையும் தேர்வு செய்து நடித்து வருகிறார்.

சமூக வலைதளங்களில் தீவிரமாக இயங்கி வரும் நட்சத்திர பிரபலங்களின் வரிசையில் முன்னணியில் இருக்கும் சாக்ஷி அகர்வாலிடம் தற்போது பணியாற்றி வரும் படங்களைப் பற்றி கேட்டபோது, '' பிரபுதேவா நடிப்பில் தயாராகி இருக்கும் 'பஹிரா' மற்றும் இயக்குநரும், நடிகருமான எஸ். ஏ. சந்திரசேகர் இயக்கத்தில் சமுத்திரக்கனி நாயகனாக நடிக்கும் 'நான் கடவுள் இல்லை' என்ற இரண்டு படங்களின் பணிகளை நிறைவு செய்திருக்கிறேன். 'கெஸ்ட் - சாப்டர் 2' எனும் அனிமல் திரில்லர் ஜானரிலான படத்தில் கதையின் நாயகியாக நடித்து வருகிறேன். அறிமுக இயக்குநர் விக்கி இயக்கத்தில் தயாராகி வரும் பெயரிடப்படாத படத்தில் நடிகர் சந்தோஷ் பிரதாப்புக்கு ஜோடியாக அழுத்தமான வேடத்தில் நடித்து வருகிறேன். இதை தொடர்ந்து 'கந்தகோட்டை' படத்தை இயக்கிய இயக்குநர் சக்தி இயக்கத்தில் தயாராகி வரும் பெயரிடப்படாத இரண்டு படங்களில் கதாநாயகியாக நடித்து வருகிறேன்." என்றார்.

தொடர்ந்து எம்மாதிரியான படங்களில் நடிக்க விரும்புகிறீர்கள் எனக் கேட்டபோது, '' கதையின் நாயகிக்கு முக்கியத்துவம் அளிக்கும் வகையிலான கதைகளில் நடிப்பதற்கான வாய்ப்பு தொடர்ச்சியாக வருகிறது. இதில் இரண்டு மலையாள படங்களில் கதைகளை தேர்வு செய்து நடிக்க ஒப்புக் கொண்டிருக்கிறேன். தமிழிலும் கதையின் நாயகியாக நடிப்பதற்கான வாய்ப்புகள் வருகின்றன. அவற்றில் எனக்கு பொருத்தமான கதைகளையும், கதாபாத்திரங்களையும் தேர்ந்தெடுத்து நடிக்க திட்டமிட்டிருக்கிறேன்." என்றார்.

சமூக வலைத்தளங்களில் தொடர்ந்து கவர்ச்சியான புகைப்படங்களை பதிவிடுவது குறித்து கேட்டபோது, " பட வாய்ப்பிற்காக பதிவிடவில்லை என்பதை முதலில் தெளிவுபடுத்துகிறேன். என்னுடைய சமூக வலைதள பக்கத்தை கிட்டத்தட்ட இரண்டு மில்லியன் ரசிகர்கள் மற்றும் பார்வையாளர்கள் பின்தொடர்பாளர்களாக இருக்கிறார்கள். இவர்களுடனான உறவையும், நட்பையும் ஆரோக்கியமாக பேணுவதற்கு புகைப்படங்களை பதிவிடுகிறேன். தொடர்ந்து சமூகம் குறித்த ஆக்கபூர்வமான விசயங்களையும் பகிர்ந்து கொள்கிறேன்.'' என பதிலளித்தார்.

இதனிடையே நடிகை சாக்ஷி அகர்வால் நடிப்பிற்காக லாஸ் ஏஞ்சல்ஸ் நகரிலுள்ள சர்வதேச புகழ்பெற்ற நடிப்பு பயிற்சி கல்லூரியில் பயிற்சி பெற்றவர் என்பதும், சில ஹாலிவுட் குறும்படங்களில் நடித்து விருதுகளை வென்றிருக்கிறார் என்பதும் குறிப்பிடத்தக்கது.

## இந்திய தர நிர்ணய அமைவனத்தின் கலந்துரையாடல் நிகழ்ச்சி இன்று சென்னையில் நடைபெற்றது




சென்னை, அக்டோபர் 27 2022: இந்திய தர நிர்ணய அமைவனம் , சென்னை கிளை அலுவலகம்-மி “வலுவூட்டப்பட்ட கண்ணாடி ஃபைபர் பிளாஸ்டிக் பேனல் வகை உள் பயன்பாட்டிற்கான கதவு, ஷட்டர்கள் - இந்திய தரநியமம் 14856:2000” என்ற தலைப்பில், "மானக் மந்தன்” நிகழ்ச்சியை சென்னையில் இன்று 26 அக்டோபர் 2022 அன்று நடத்தியது.

வலுவூட்டப்பட்ட கண்ணாடி ஃபைபர் பிளாஸ்டிக் என்பது விமானம் மற்றும் ராக்கெட் பாகங்கள் முதல் நுகர்வோர் சாதனங்கள் வரை பல்வேறு துறைகளில் பயன்படக்கூடிய ஒரு பொறியியல் பிளாஸ்டிக் கண்டுபிடிப்பாகும். இது முக்கியமாக கூரைகள் மற்றும் கதவுகளுக்கான கட்டுமானத்தில் பயன்படுத்தப்படுகிறது. தொழில்துறை கட்டிடக் கட்டமைப்புகளுக்கு நிலைத்தன்மை, ஆயுள் மற்றும் வலுவைச் சேர்ப்பதில் ஜி ஆர் பி பயனுள்ளதாக இருக்கும். ஜி ஆர் பி பொதுவாக அவற்றின் உறுதித்தன்மை மற்றும் வலிமைக்கு பெயர்பெற்றதாலும், பல்வேறு வடிவங்கள், மற்றும் அளவுகளில் மாற்றியமைக்கக்கூடிய பண்புகளைப் பெற்றிருக்கும் காரணங்களாலும் வணிக மற்றும் தொழில்துறை பயன்பாடுகளுக்கு சிறந்தவை. ஆனால் இந்த தர நியமம் 14856:2000 சிறப்பு கட்டிடங்களான பட்டறைகள், கேரேஜ்கள், குடோன்கள் போன்றவற்றிற்கான பெரிய அளவிலான கதவு ஷட்டர்களை உள்ளடக்காது..

தொழில்துறை மற்றும் வர்த்தக அமைப்புகள், வர்த்தக சபைகள், தொழில் சங்கங்கள், பொதுத்துறை நிறுவனங்கள் அல்லது அத்தகைய தயாரிப்புகளைப் பயன்படுத்தும் நிறுவனங்கள், அரசுத் துறைகள், ஒழுங்குமுறை அமைப்புகள், ஆய்வகங்கள், சிவில் சமூகக் குழுக்கள் மற்றும் கல்வியாளர்கள் , இந்த நிகழ்வுக்கு அழைக்கப்பட்டிருந்தனர் . மூலப்பொருள் தேவைகள் முதல் சோதனை வரை தரநிலையின் விவரக்குறிப்புகள் விவாதிக்கப்பட்டன. பெறப்பட்ட கருத்துக்கள் தரநியமத்தின் முன்னேற்றத்திற்காக பயன்படுத்தப்படும்.

நிகழ்ச்சியின் சிறப்பு விருந்தினராக, சிப்பெட்-ன் முதன்மை மேலாளர் டாக்டர் சையத் அமானுல்லா தனது தொடக்க உரையை நிகழ்த்தினார். திருமதி. நி. பவானி, விஞ்ஞானி, இயக்குனர் மற்றும் தலைவர் (பி ஐ எஸ்-சென்னை கிளை அலுவலகம்) நிகழ்ச்சியில் வரவேற்புரையாற்றி நிகழ்ச்சியின் நோக்கங்கள் பற்றி விளக்கினார். டாக்டர். சீபாய், விஞ்ஞானி-சி & ஸ்ரீ டி. பானு கிரண், விஞ்ஞானி-பி, சென்னை கிளை அலுவலகம்-மி, பி ஐ எஸ் தொழில்நுட்ப கலந்துரையாடல் நிகழ்வுகளை நடத்தினர். நன்றியுரையுடன் மானக் மந்தன் நிகழ்ச்சி நிறைவடைந்தது.

இத்தகவலை துணை இயக்குனர் (சந்தை மற்றும் நுகர்வோர் விவகாரம் ) திரு. எச். அஜய் கன்னா தெரிவித்துள்ளார்.

## பொறியியல் மற்றும் அறிவியல் முதுநிலை பட்டதாரிகளுக்கு பட்டமளிப்பு விழா கல்பாக்கம் அணுஆராய்ச்சி மையத்தில் நடைபெற்றது






சென்னை, அக்டோபர் 27 2022: அணு அறிவியல் மற்றும் எந்திரவியல், வேதியியல், அதிவேக உலை தொழில்நுட்பம், மின்னணு உட்பட ஆறு பொறியியல் துறைகளில் ஓராண்டு புத்தாக்கம் மற்றும் பயிற்சி நிறைவு செய்தவர்களுக்கு கல்பாக்கத்தில் உள்ள இந்திராகாந்தி அணு ஆராய்ச்சி மையத்தில் பட்டமளிப்பு விழா 2022 அக்டோபர் 26 அன்று நடைபெற்றது. இந்த விழாவில் பேசிய அணு ஆராய்ச்சி மையத்தின் இயக்குநரும் புகழ்பெற்ற விஞ்ஞானியுமான பேராசிரியர் பி வெங்கட்ராமன், 1950 ஆம் ஆண்டிலேயே இந்தியாவின் 3 நிலையிலான அணுசக்தித் திட்டத்திற்கு அடித்தளமிட்ட டாக்டர் ஹோமி பாபாவின் தொலைநோக்கு பார்வையை பாராட்டினார். கார்பைட் எரிபொருளை பயன்படுத்தி அதன் சுழற்சியை வெற்றிகரமாக நிறுத்தும் திறன் கொண்ட ஒரேநாடாக இந்தியா விளங்குவது பெருமைக்குரியது என்று அவர் கூறினார். பயிற்சி பெற்ற அதிகாரிகள் தங்களின் முயற்சிகளில் வெற்றி அடைவதற்கு சிறந்த, ஒருங்கிணைந்த முயற்சிகளை மேற்கொள்ளுமாறு திரு வெங்கட்ராமன் அறிவுறுத்தினார்.

தொழில்முறை வளர்ச்சி மற்றும் பயிற்சிக்கான மையத்தின் இயக்குநர் பேராசிரியர் எம் சாய்பாபா இந்த விழாவில் தலைமை விருந்தினராக கலந்து கொண்டு சிறப்பாக தேர்ச்சி பெற்றவர்களுக்கு கவுரவமிக்க ஹோமி பாபா பதக்கங்கள், பரிசுகள் மற்றும் சான்றிதழ்களை வழங்கினார். 2021-2022 கல்வி ஆண்டுக்கான விழா மலரையும் வெளியிட்டார்.

விழாவில் வரவேற்புரையாற்றிய பாபா அணு ஆராய்ச்சி மைய பயிற்சிப் பள்ளி தலைவர் டாக்டர் வித்யா சுந்தர்ராஜன், கடந்த 16 ஆண்டுகளில் 570 பயிற்சியாளர்கள் பட்டம் அணுசக்தித் துறையின் பல்வேறு பிரிவுகளில் வெற்றிகரமாக பணியமர்த்தப்பட்டுள்ளனர் என்றார்.

இந்த பயிற்சித் தொகுப்பில் ஒட்டுமொத்த முதன்மை நிலையை பெற்ற குஷ்பூ வர்ஷினி ஹோமி பாபா பதக்கம் பெற்றார். விழா நிறைவில் பொறியியல் மற்றும் அறிவியலுக்கான புத்தாக்கப் பயிற்சிப் பிரிவின் தலைவர் டாக்டர் என் மதுரை மீனாட்சி நன்றி தெரிவித்தார்.

# புதிய தொழில்நுட்ப உருவாக்கத்திற்காக ஸ்டாக்ஹோம் பல்கலை., ஸ்வீடன் நாட்டு நிறுவனங்கள் & ஐஐடி (பி எச் யு)- வாரணாசி ஆகியவற்றோடு ஒத்துழைப்பு நடவடிக்கைகளை மேற்கொள்ளும் விகாஸ் லைஃப்கேர்

கோவை, அக்டோபர் 27 2022: மும்பை பங்குச்சந்தை மற்றும் தேசிய பங்குச்சந்தைகளில் பட்டியலிடப்பட்டிருக்கும் நிறுவனமான விகாஸ் லைஃப்கேர் லிமிடெட், உலகத்தரம் வாய்ந்த மூன்று கல்வி நிறுவனங்கள் மற்றும் அமைப்புகள் உடனான தனது ஒத்துழைப்பு செயல்பாட்டை இன்று அறிவித்திருக்கிறது. நெல், உமியிலிருந்து செல்லுலோஸ், லிக்னின் மற்றும் சிலிகா போன்ற சாத்தியமுள்ள பொருட்களை உருவாக்குவது மீதான ஆராய்ச்சி உள்ளீடுகள் மற்றும் மேற்கொள்ளப்படும் செயற்பணிகள் பற்றிய தகவலை உணர்ந்துகொள்வது இந்த ஒத்துழைப்பின் நோக்கமாகும். இந்த வேளாண் சுழற்சி செயல்திட்டத்திற்காக, புதுடெல்லியை தளமாக கொண்டு இயங்கும் விகாஸ் லைஃப்கேர், இந்தியன் இன்ஸ்டிடியூட் ஆஃப் டெக்னாலஜி (பி எச் யு) - வாரணாசி மற்றும் ஸ்வீடனின் ஸ்டாக்ஹோம் பல்கலைக்கழகம் போன்ற உயர் கல்வி அமைப்புகளுடன் ஆராய்ச்சிக்கான ஒத்துழைப்பு உடன்பாட்டை செய்துகொண்டிருக்கிறது. இதுமட்டுமன்றி, இதே செயல்நோக்கத்திற்காக லிகின்ஃபுளோ டெக்னாலஜிஸ் மற்றும் லிக்ஸியா கம்ப்யூலர் என்ற பெயர் கொண்ட உலகப்புகழ் பெற்ற ஸ்வீடிஷ் தொழில்நிறுவனங்களோடும் இந்நிறுவனம் கூட்டுவகிப்பு நடவடிக்கைக்கான ஒப்பந்தத்தில் கையொப்பமிட்டிருக்கிறது. வேளாண் - தொழிலக இடைப்பாய்வுகளிலிருந்து சுழல் பொருட்களின் உற்பத்திக்காக புதுமையான மதிப்பு சங்கிலி கருத்தாக்கங்களை நிலைநாட்டுவதே இந்த அக்ரோ - சுழல்வட்ட செயல்திட்டத்தின் பிரதான நோக்கம் என்று இந்நிறுவனம் வெளியிட்டிருக்கின்ற ஊடக செய்திக்குறிப்பில் குறிப்பிட்டிருக்கிறது. "வயல்வெளிகளில் அறுவடைக்குப் பிறகு எஞ்சியிருக்கும் சாகுபடி எச்சங்களை எரிப்பதனால் உருவாகும் கடுமையான மாசு, குளிர்காலத்தின்போது வடஇந்திய மாநிலங்களில் மிக மோசமான காற்றின் தரம் நிலவுவதற்கு மிகப்பெரிய காரணமாக இருக்கிறது. இதை தவிர்ப்பதற்காக வேளாண் சாகுபடியிலிருந்து கிடைக்கக்கூடிய இந்த கழிவு தாவரப்பொருட்களிலிருந்து எடுக்கக்கூடிய இயற்கையான பாலிமர்களிலிருந்து புதிய, தாவர அடிப்படையிலான பொருட்களை தயாரிக்க நவீன செயல்உத்திகளை உருவாக்குவது இச்செயல்திட்டத்தின் நோக்கமாகும்." என்று இந்த செய்தியறிக்கை குறிப்பிட்டிருக்கிறது. சாகுபடி செய்யப்படும் நெற்பயிரின் அறுவடைக்குப் பிறகு எஞ்சியிருக்கும் அடிக்கட்டைகளிலிருந்து செல்லுலோசை தயாரிக்கும் செயல்முறையை திறம்பட உருவாக்குவது லிக்ஸியா கம்ப்யூலர் நிறுவனத்தின் நோக்கமாகும்; இதற்கு லிக்ஸியாவின் டென்ட்ரிட்டிக் செயல்முறையை இந்நிறுவனம் பயன்படுத்தும். மற்றொரு செயல்பாடாக லிகின்ஃபுளோ டெக்னாலஜிஸ், எ பி, வாரணாசியைச் சேர்ந்த ஐஐடி (பி எச் யு) உடன் சேர்ந்து, லிக்னின் தயாரிப்பிற்கு ஆதரவளித்து உறுதுணையாக இருப்பதை இலக்காக கொண்டிருக்கிறது. நெல் உமியிலிருந்து நானோ சிலிக்காவை தயாரிக்க ஒரு தொழில்நுட்பத்தை உருவாக்குவதில் ஒரு முக்கிய பங்கினை விகாஸ் லைஃப்கேர் ஆற்றும். லிகினோசெல்லுலோஸ் பின்னங்களை பண்புருவாக்கல் செய்வது வழியாக ஸ்டாக்ஹோம் பல்கலைக்கழகமும் & ஐஐடி (பி எச் யு) - வாரணாசி கல்வி நிறுவனமும் பங்களிப்பை வழங்கும். இதற்கும் கூடுதலாக, புதிய உயிரி / தாவர அடிப்படையிலான செயலாக்கம் செய்யப்பட்ட செல்லுலோசின் ஃபைபர்களை (இழைமநார்கள்) ஐஐடி - வாரணாசி, ஸ்டாக்ஹோம் பல்கலைக்கழகம் மற்றும் பயோ-நானோ ஆகியவை வடிவமைக்கும். விகாஸ் லைஃப்கேர் - ன் நிர்வாக இயக்குனர் மற்றும் பிரபல அறிவியலாளர் டாக்டர். எஸ்கே. தவான் இந்த ஒத்துழைப்பு நடவடிக்கை குறித்து பேசுகையில் கூறியதாவது: "உற்பத்தி, மீட்பு, மறுபயன்பாடு மற்றும் அதன் வாழ்க்கையின் இறுதியில் அதன் மூல வடிவத்திற்கு திரும்ப அனுப்புவது என்பவற்றின் நீடித்த நிலைப்புத்தன்மையை எட்டுவதற்கு ஒரு சுழற்சி பொருளாதாரத்தை உருவாக்குவதே இந்த ஒத்துழைப்பு நடவடிக்கையின் குறிக்கோளாகும். இதன்மூலம் பயன்படாத கழிவுகளே உருவாகாத நிலை ஏற்படும் அல்லது மிக மிக குறைவான அளவு கழிவுகளே மிஞ்சும்."

# ஃபோர்டிஸ் வடபழனி தனது 2வது ஆண்டு விழாவை முன்னிட்டு குழந்தைகளுக்கான ஓவியப் போட்டியை அறிவித்துள்ளது

சென்னை, அக்டோபர் 27 2022: சென்னை வடபழனி ஃபோர்டிஸ் மருத்துவமனை, அதன் 2வது ஆண்டு விழாவின் ஒரு பகுதியாக, குழந்தைகளின் கலைத் திறமைகளை ஊக்குவிக்கும் வகையில் ஓவியப் போட்டியை அறிவித்தது. போட்டி அக்டோபர் 30, 2022 அன்று ஃபோர்டிஸ் மருத்துவமனை வடபழனியில் காலை 9:30 மணிக்கு நடைபெறும். 1ம் வகுப்பு முதல் 10ம் வகுப்பு வரை பயிலும் மாணவ, மாணவியர் ஓவியப் போட்டியில் பங்கேற்கலாம்.

வாட்டர் கலர்கள், சுவரொட்டி வண்ணங்கள், அக்ரிலிக் போன்ற எந்தவொரு ஊடகத்தையும் பயன்படுத்தி கொடுக்கப்பட்ட கருப்பொருளின் அடிப்படையில் ஓவியத்தை சித்தரிக்க குழந்தைகளை இந்தப் போட்டி வரவேற்கிறது. அவர்கள் படிக்கும் வகுப்பின் அடிப்படையில் வெவ்வேறு போட்டித் தலைப்புகள் கொடுக்கப்பட்டுள்ளன. 1ஆம் வகுப்பு முதல் 3ஆம் வகுப்பு வரை, 'பூலோகத்தின் பாதுகாத்தல்' எனும் கருப்பொருளாகக் குழந்தைகள் தங்கள் கற்பனைத் திறனை ஓவியக் கலை வடிவத்தின் மூலம் அந்தக் கருத்தை கலைநயத்துடன் சித்தரிக்க வேண்டும். 4 ஆம் வகுப்பு முதல் 6 ஆம் வகுப்பு வரை குழந்தைகள் ஆரோக்கியத்தின் முக்கியத்துவத்தை தங்கள் வண்ணங்களின் மூலம் வெளிப்படுத்த வேண்டும். 7 ஆம் வகுப்பு முதல் 10 ஆம் வகுப்பு வரை 'முதியோர்களுக்கான பராமரிப்பு' என்ற கருத்தில் வரைய வேண்டும்.

# அருணாச்சல பிரதேச மார்க்கெட்டில் தீ விபத்து: 650 கடைகள் எரிந்து நாசம்



சென்னை, அக்டோபர் 27 2022: அருணாச்சல பிரதேச மார்க்கெட் பகுதியில் நிகழ்ந்த தீ விபத்தில் 650க்கும் மேற்பட்ட கடைகள் எரிந்து நாசமானது, அங்குள்ள மக்களை அதிர்ச்சியடைய வைத்துள்ளது.

அருணாச்சல பிரதேச மாநிலம், இட்டாநகரில் நஹர்லகுன் டெய்லி எனும் பழமையான மார்க்கெட் உள்ளது. இங்கு நேற்று அதிகாலை பயங்கர தீ விபத்து ஏற்பட்டது. இதில் 650க்கும் மேற்பட்ட கடைகள் எரிந்து நாசமாகின. எரிந்து சாம்பலான கடைகளுக்குள் இருந்த பொருட்களின் மதிப்பு மொத்தம் ரூ. 3 கோடிக்கு மேல் இருக்கும் என்று மதிப்பிடப்பட்டுள்ளது.

அலட்சியமே காரணம்

மார்க்கெட் பகுதியில் அமைந்துள்ள ஒரு வீட்டில் தீபாவளிக்கு வெடிக்கப்பட்ட பட்டாசு காரணமாக தீ விபத்து ஏற்பட்டிருக்கலாம் என தெரிவித்துள்ள அப்பகுதி மக்கள், மார்க்கெட்டில் இருந்த பெரும்பாலான கடைகள் மூங்கில் மற்றும் மரக்கட்டைகளால் ஆனவை என்பதால் எளிதில் தீப்பற்றியதாகவும் அங்குள்ளவர்கள் வேதனையுடன் தெரிவித்துள்ளனர்.

தீவிபத்து குறித்த தகவல் அறிந்தும், தீயணைப்பு படையினர் சம்பவ இடத்துக்கு தாமதமாக வந்தும், தீயணைப்பு வாகனங்களில் தீயை அணைப்பதற்கு போதுமான தண்ணீர் இல்லாமல் இருந்ததும்தான் தீ விபத்தில், அதிக சேதம் ஏற்பட காரணம் எனவும் அப்பகுதிவாசிகள் குற்றம் சாட்டுகின்றனர்.

மேலும் இந்த விபத்தை தடுக்கத்தவறி, அலட்சியமாக செயல்பட்ட தீயணைப்பு வீரர்களை பணி நீக்கம் செய்ய வேண்டும் எனவும் பொதுமக்கள் வலியுறுத்தி உள்ளனர்.

# ரூ.2425 கோடி மோசடியில் ஈடுபட்ட ஆருத்ரா கோல்டு நிதி நிறுவன இயக்குநருக்கு ஜாமீன் மறுப்பு - சிறப்பு நீதிமன்றம் உத்தரவு




சென்னை, அக்டோபர் 27 2022: அதிக வட்டி தருவதாக கூறி, பொது மக்களிடம் இருந்து முதலீடுகளை பெற்று மோசடி செய்த வழக்கில் ஆருத்ரா கோல்டு நிறுவன இயக்குனருக்கு ஜாமின் தர மறுத்து, நிதி நிறுவன மோசடிகளை விசாரிக்கும் சிறப்பு நீதிமன்றம் உத்தரவிட்டுள்ளது.

சென்னை அமைந்தகரையை தலைமையிடமாக கொண்டு இயங்கிய, 'ஆருத்ரா கோல்டு டிரேடிங்' நிறுவனத்தில் முதலீடு செய்பவர்களுக்கு மாதம் தோறும் 10 முதல் 30 சதவீதம் வரை வட்டி தருவதாக கூறி, பல ஆயிரம் கோடி ரூபாய் வசூலித்ததாக குற்றம் சாட்டி, சென்னை பொருளாதார குற்றப்பிரிவு போலீசார் தாமாக முன்வந்து வழக்குப்பதிவு செய்தனர்.

தொடர்ந்து, அந்த நிறுவன இயக்குனர்கள் 8 பேர் மீதும், ஆருத்ரா என்ற பெயரில் செயல்பட்ட 5 நிறுவனங்கள் மீதும் வழக்குப்பதிவு செய்தனர். பின், நிறுவன இயக்குனர்கள் உள்பட பலரை போலீசார் கைது செய்தனர்.

ரூ.2425 கோடி மோசடி

இந்த வழக்கு, நிதி நிறுவன மோசடிகளை விசாரிக்கும் தமிழ்நாடு முதலீட்டாளர்கள் நல பாதுகாப்பு சிறப்பு நீதிமன்றத்தில் (டான்பிட்) விசாரணை நடந்து வருகிறது. இந்த வழக்கில் ஜாமீன் கோரி நிறுவன இயக்குனர் பட்டாபிராம் மனு தாக்கல் செய்தார்.

இந்த மனு, சிறப்பு நீதிபதி ஜி.கருணாநிதி முன் விசாரணைக்கு வந்தபோது, காவல்துறை தரப்பில், முதலீட்டாளர்களிடம் 2,425 கோடி ரூபாய் அளவுக்கு சட்ட விரோதமாக பணம் வசூலித்ததில் மனுதாரருக்கு முக்கிய பங்கு உள்ளதாகவும், விசாரணை இன்னும் நிறைவு பெறவில்லை எனவும், 1,08,908 புகார்கள் வந்துள்ளதாகவும் தெரிவிக்கப்பட்டது.

இதையடுத்து இயக்குனர் பட்டாபிராமின் ஜாமின் மனுவை தள்ளுபடி செய்து நீதிபதி உத்தரவிட்டார்.

# டி20 உலகக் கோப்பை; இந்திய வீரர்களுக்கு வழங்கிய உணவு சரியில்லை: பிசிசிஐ



சென்னை, அக்டோபர் 27 2022: ஆஸ்திரேலியாவில் இந்திய கிரிக்கெட் அணி வீரர்களுக்கு பயிற்சிக்கு பிறகு வழங்கப்பட்ட உணவு சரியில்லை என பிசிசிஐ தெரிவித்துள்ளது.

8-வது 20 ஓவர் உலக கோப்பை கிரிக்கெட் போட்டி ஆஸ்திரேலியாவில் நடந்து வருகிறது. இதில், சூப்பர் 12 சுற்றில் பாகிஸ்தானுக்கு எதிரான முதல் ஆட்டத்தில் இந்திய அணி 4 விக்கெட் வித்தியாசத்தில் வெற்றி பெற்றது. இந்திய அணி, நாளை சிட்னியில் நடைபெறும் ஆட்டத்தில் நெதர்லாந்து அணியை எதிர்கொள்கிறது. இதற்கான பயிற்சியில் இந்திய அணி ஈடுபட்டு வருகிறது.

இந்த நிலையில், சிட்னியில் இந்திய கிரிக்கெட் அணி வீரர்களுக்கு வழங்கப்பட்ட உணவு சரியில்லை என பிசிசிஐ தெரிவித்துள்ளது. இந்திய அணி வீரர்களுக்கு சரியான உணவு வழங்கப்படவில்லை. அவர்களுக்கு சாண்ட்விச் மட்டுமே கொடுக்கப்படுவதாக பிசிசிஐ தெரிவித்துள்ளது.

சிட்னியில் நடந்த பயிற்சிக்கு பிறகு வழங்கப்பட்ட உணவு ஆறிபோனதாகவும், நல்ல உணவாக இல்லை என்றும் இதுகுறித்து இந்திய அணி வீரர்கள் ஐசிசியிடம் தெரிவித்துள்ளதாக பிசிசிஐ தெரிவித்துள்ளது.

20 ஓவர் உலகக்கோப்பை தொடரில் பங்கேற்றிருக்கும் அணிகளுக்கு ஐசிசி உணவு வழங்கி வருவது குறிப்பிடத்தக்கது.

# ஆன்லைன் ரம்மியில் பணத்தை இழந்த வாலிபர் தூக்கிட்டு தற்கொலை

சென்னை, அக்டோபர் 27 2022: ஆன்லைன் ரம்மியில் பணத்தை இழந்த வாலிபர் தூக்குப்போட்டு தற்கொலை செய்து கொண்டார்.

தூத்துக்குடி மாவட்டம் விளாத்திகுளம் அருகே உள்ள ஸ்ரீவைகுண்ட பெருமாள்புரம் கிராமத்தைச் சேர்ந்தவர் பூபதிராஜா (வயது 28). டிப்ளமோ படித்துவிட்டு தனியார் பவர் பிளாண்டில் பகுதி நேர ஊழியராக வேலை செய்து வந்தார்.

இவருக்கு ஆன்லைன் ரம்மியில் சூதாடும் பழக்கம் இருந்துள்ளது. தமிழகத்தில் தடை செய்யப்படுவதற்கு முன் ஆன்லைன் ரம்மி விளையாட்டில் அதிகமான பணத்தை இழந்துள்ளதாக கூறப்படுகிறது.

இதையடுத்து பூபதிராஜா கடந்த சில நாட்களாகவே சோகமாகவே இருந்துள்ளார். இதனால் அவரை பெற்றோர் கண்டித்துள்ளனர். இதனால் மனமுடைந்த பூபதிராஜா வீட்டில் யாரும் இல்லாத போது தூக்கிட்டு தற்கொலை செய்து கொண்டார்.

அவரது உடலை கைப்பற்றிய குளத்தூர் போலீசார் பிரேத பரிசோதனைக்காக தூத்துக்குடி அரசு மருத்துவமனைக்கு அனுப்பி வைத்தனர். மேலும் சம்பவம் குறித்து வழக்குப்பதிவு செய்து விசாரணை மேற்கொண்டு வருகின்றனர்.